## வரையறுக்கப்பட்ட தனியார் மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனி – 2015

வரையறுக்கப்பட்ட தனியார் மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட தனியார் மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

மீளாய்வாண்டில் கம்பனியால் ரூபா 450 மில்லியன் தேறிய நட்டமொன்று நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நட்டம் ரூபா 1,426 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. மேலும், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 (1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,372 மில்லியன் தொகையானதுடன் அதனால் கம்பனியானது அதேபோல் தீவிர மூலதன நட்டத்தில் இயங்கியிருந்தது. அதனால் கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பாக நிச்சமற்ற தன்மை எழுந்திருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுகளில் அறவீடு நிச்சயமற்றதாக உள்ளடக்கப்பட்ட ரூபா 28.4 மில்லியன் பெறவேண்டிய இழுவை கோரிக்கை மீதியானது மூன்றாம் கட்சி உறுதிபடுத்தலுடன் ஆதாரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் ஏதாவது சாத்தியமான எதிர்கால நட்க்கழிவுகளிற்காக நிதிக்கூற்றுகளில் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

புத்தகங்களில் காட்டப்பட்ட இருப்பு மீதிக்கும் எரிபொருள் நிலவறை எண்ணெயின் இருப்புக்கள் தொடர்பான பௌதீக இருப்புக்கும் இடையில் ஐ.அ.டொலர் 2,092,400 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| எண்ணெயின் வகை | புத்தகங்களின் பிரகாரம் மீதி (மெற்றிக் தொன்கள்) | பௌதீக இருப்பின் பிரகாரம் மீதி (மெற்றிக் தொன்கள்) | வேறுபாடு (மெற்றிக் தொன்கள்) | அலகொன்றிற்கான சராசரிக் கொள்வனவுக் கிரயம் (ஐ.அ.டொலர்) | பெறுமதி (ஐ.அ.டொலர்) |
|---|---|---|---|---|---|
| ஐஎவ்ஓ 380 | 663 | 1,853 | 1,190 | 580 | 690,200 |
| எம்ஜிஓ | 14,582 | 16,140 | 1,558 | 900 | 1,402,200 |
| | | | | | 2,092,400 |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.2 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியும் செயலாற்றலை மதிப்பிட்டு செயலாற்றல் அறிக்கையை தயாரித்து பணிப்பளர் சபையின் மதிப்பாய்விற்காக சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனியானது அத்தகைய மதிப்பீட்டை மேற்கொண்டு அவ்வாறு செயலாற்றல் அறிக்கையை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) 5.1.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியும் கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க வேண்டிய போதிலும் கம்பனி அத்தகைய திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. |
| (iii) 5.1.2 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொது முயற்சியும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அதற்கான உறுதிப்படுத்தலில் வேலையின் விபரம் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனி அத்தகைய திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. |
| (iv) 7.2 ஆம் பிரிவு | அனைத்து பிரதான செயற்பாடுகளையும் மேவுகை செய்யும் வகையில் நிர்வாகப் பிரிவின் பிரதான விடயமொன்றாக நடைமுறை கைநூல்/ முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அத்தகைய செயற்பாட்டு கைநூலை தயாரித்திருக்கவில்லை. |
| (v) 7.4.1 ஆம் பிரிவு | உள்ளகக் கணக்காய்வின் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கான சிபாரிசுகளை எதிர்கொண்டு வழங்க வேண்டிய போதிலும் கம்பனியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இருக்காததுடன் அவ்வாறே கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (vi) 8.2.2 ஆம் பிரிவு | நிதி மிகைகளை முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 251 மில்லியன் முதலீட்டிற்கான அந்த ஒத்துழைப்பை கம்பனி பெற்றிருக்கவில்லை. |
| (vii) 9.3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பொதுமுயற்சியும் ஒவ்வொரு பதவிக்கும் முறையான ஆட்சேர்ப்புத் திட்டத்தினை தயாரித்து வரிசை அமைச்சின் அங்கீகாரத்தினையும் பொதுமுயற்சித் திணைக்களத்தின் ஒத்துழைப்பையும் பெறவேண்டிய போதிலும் கம்பனி அத்தகைய |

ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரித்து ஏற்கனவே இருக்கின்ற பதவிகளுக்காக உரிய தரப்பினர்களின் அங்கீகாரத்தினை பெற்றிருக்கவில்லை.

| | |
|---|---|
| (ஆ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டி | பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு தொடர்பான மாதாந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது பெறுமதி சேர் வரி மீதான மாதாந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 983 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 449 மில்லியன் நட்டமடைந்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நட்டத்தில் ரூபா 534 மில்லியன் குறைவொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 501 மில்லியனால் நிர்வாகச் செலவினம் குறைவடைந்தமை நட்டத்தில் ஏற்பட்ட குறைவிற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013 ஆம் ஆண்டின் ரூபா 7,991,434 தேறியலாபம் 2015 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 449,754,034 தேறிய நட்டம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் வேதனங்கள், செலுத்தப்பட்ட அரசாங்க வரிகள், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு, நட்டக் கழிவு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் மீதான நட்டங்கள் என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 22,566,878 தொகையான கம்பனியின் பங்களிப்பு தொடர்ச்சியாக முன்னேறி 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 215,179,149 தொகையை ஏற்படுத்தியிருந்தது.

## 4. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் கம்பனியின் நடைமுறை விகிதம் 6.8 ஆக இருந்ததுடன் இது 2015 இல் 0.52 ஆக இருந்தமையால் அவற்றின் அதிக வீழ்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், இந்த அறிக்கையின் 2.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் கம்பனியின் தொழிற்படு மூலதனம் தொடர்பில் எழுந்துள்ள விடயங்களின் சாதகமான உயர் ஆபத்தை கணக்காய்வில் குறிப்பிட முடியாதுள்ளது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் தேறியலாப விகிதம் 27 சதவீதமாக இருந்ததுடன் இது 2015 ஆம் ஆண்டில் 29 சதவீத எதிர்மறை பெறுமதி வரை குறைவடைந்திருந்தது. அதனால் கம்பனியின் செயலாற்றல் திருப்திகரமான மட்டத்திலிருக்கவில்லை என்பதை கணக்காய்வில் உட்படுத்தமுடியாதுள்ளது.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

கம்பனியின் அகவிதியின் பிரகாரம் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக கம்பனியானது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

(அ) இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையால் காலத்திற்கு காலம் கம்பனிக்கு ஒதுக்கப்படுகின்ற கடமைகளையும் தொழிற்பாடுகளையும் ஆற்றுவதுடன் முகாமையை நடாத்திச் செல்லல் மற்றும் மாகம்புற துறைமுகத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல்

(ஆ) அம்பாந்தோட்டையிலுள்ள மஹிந்த ராஜபக்ச துறைமுகத்தை நவீன சர்வதேச கடல் துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்தல்.

(இ) அம்பாந்தோட்டையிலுள்ள மஹிந்த ராஜபக்ச துறைமுகத்தின் எல்லைகளிற்குள் கைத்தொழில் வலையமொன்றை ஸ்தாபித்தல்.

(ஈ) கப்பல்களுக்கு கடல் எரிபொருள், தண்ணீர் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல்.

அம்பாந்தோட்டையிலுள்ள துறைமுகத்தின் எல்லைகளுக்குள் கைத்தொழில் வலயமொன்றை ஸ்தாபித்தல் பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருந்த போதிலும் கம்பனியானது மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அந்த நோக்கத்தை அடைவதற்கு தவறியிருந்தது.

### 5.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் மேற்கூறப்பட்ட நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத இன்ரலொக் புளொக்கிங்ஸ் மற்றும் கிறஷர்ஸ் இன் செயற்பாட்டு நடவடிக்கைகளை கம்பனி பேணியிருந்தது. அதனால் 2014 ஆம் ஆண்டில் ரூபா 5,375,253 மொத்த நட்டம் ஏற்பட்டிந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் அந்த நடவடிக்கைகள் காரணமாக ரூபா 4,149,757 மொத்தலாபம் உழைக்கப்பட்டிருந்ததால் ரூபா 1,225,496 தேறிய நட்டத்தை சுட்டிக்காட்டுகின்றது.

**(ஆ) நிலவறை எண்ணெயின் இருப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 1,841,036,066 கிரயமான எண்ணெய் இருப்பு கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாமல் 2015 ஏப்ரலின் பின்னர் நிலவறை நடவடிக்கை நிறுத்தப்பட்டமை காரணமாக விளைவற்றிருந்தது.

(ii) இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தலைவரின் 2016 யூன் 24 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், ரூபா 75,340,526 தொகையான காப்புறுதி கோரிக்கையானது பயன்படுத்த முடியாதிருந்த ரூபா 161,356,712 கிரயமான ஐஎவ்ஓ வகை நிலவறை எண்ணெயின் 1964.2 மெட்ரிக் தொன் இருப்பிற்காக பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், களஞ்சியங்களில் மீதியாகவுள்ள ஐ.அ.டொலர் 13.7 மில்லியன் கிரயமான எம்ஜிஓ வகை நிலவறை எண்ணெயின் 14,583 மெட்ரிக் தொன் இருப்பு ஏற்கனவேயுள்ள அந்த இருப்பின் நிறத்தில் ஏற்பட்ட மாற்றம் கரணமாக பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை பெறுவதில் தவறியிருந்தமை. |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | நீண்டகாலப் பகுதிக்கு மேலாக அறவிடப்படாத மீதிகள் இருத்தல். |
| (இ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளக கணக்காய்வு அலகினை ஸ்தாபிக்காமை மற்றும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளத் தவறியமை |
| (ஈ) இருப்புக் கட்டுப்பாடு | பயன்படுத்த முடியாத இருப்புக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதிலும் அவற்றை அகற்றுவதிலும் தவறியமை. |